உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | | |
|---|---|---|---|
| துணர் உஉ | விய—தை | 1947—சனவரி | மலர் ௰ |


## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

### யாழ்நூல் அரங்கேற்றுவிழா

செந்தமிழ்த் தொண்டர், அருட்டிரு. விபுலாநந்த அடிகளார் இயற்றி யுதவிய இசைத் தமிழ் நூலாகிய யாழ்நூல் அரங்கேற்று விழா, சருவசித்து, வைகாசி, உஉ, உங (5, 6—6—47) ஆம் நாட்களில், திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில், திருஞானசம்பந்தப் பிள்ளையார் முன்னிலையில், மிகச் சிறப்பாக நிறைவெய்தியது. இவ்விழா நிகழ்ச்சியினை மற்றோரிடத்திற் குறிப்பிட்டுள்ளோம். 'புக்கிணையாத புலமையின் ஊற்றாய்ப், பொருந்தினர்க்கு ஆரமிழ் தாகி, எக்கிளைஞரினும் மிக்க அன்பளிக்கும் இருந்தமிழணங்கு' என யாழ்நூலிற் குறிப்பிட்டபடி, அருள்மிகு அடிகளா ரவர்கள் தமிழ்த் தெய்வத்தினையே தமக்குச் சுற்றமாகக் கொண்டவர்கள். பல்கலைச் செல்வ ராகிய நம் அடிகளார், பல்லாண்டுகளாகத் தாம் இடைவிடாது செய்துபோந்த ஆராய்ச்சியினால், இயலிசை நாடக மென்னும் முத்திறனுள் இசைத் தமிழ் முதல் நூலாக யாழ்நூலினை இயற்றியருளியது தமிழர்களின் நற்பேறே யாகும்.

நம் சங்கத்தைப் போற்றி வளர்த்த முதற் றலைவர் தமிழவேள் அவர்களின் நினைவுக் குறியாக இவ்யாழ்நூலினை அடிகளா ரவர்கள் வெளிப்படுத்த எண்ணினார்கள். அவர்கள் இக்கருத்தினை வெளியிடுதற்கு முன்னமே தம் உள்ளத்து உய்த்துணர்ந்து, இவ்யாழ்நூலினை எழுதிமுடித்தற்கும், பதிப்பிடுதற்கும் வேண்டும் எல்லா வுதவிகளையும், ஒருவர் சொல்லாமலே முன்னின்று செய்து, இவ்யாழ்நூல் அரங்கேற்றுவிழா

வினைத் தம் குடும்பத்தாரது மங்கல விழாவாகக் கருதிச் சிறப்பாகச் செய்து நிறைவேற்றியவர்கள், திருக்கொள்ளம்பூதூர்த் திருப்பணிச் செல்வரும், நம் சங்கப் புரவலரும் ஆகிய கோனூர் ஜமீன்தார், நச்சாந்துப்பட்டி, திருவாளர் பெ. ராம. ராம. சித. சிதம்பரஞ் செட்டியா ரவர்கள் ஆவார்கள். யாழ்நூலாசிரிய ராகிய அருண்மிகு அடிகளார் அவர்களும், அவர்களைப் பேணிப் போற்றுங் கடமையினைத் தமக்கு உரிமையாக்கிக் கொண்டு, இவ்விசைத் தமிழ் நூலினை வெளியிட்டுதவிய கோனூர் ஜமீன்தா ரவர்களும், நம் சங்கத்தின் முதல் தலைவர் நூமிழவே ளவர்களிடத்தும், சங்கத்தினிடத்தும் நீங்காப் பேரன்புடையவர்க ளாதலின, அவர்கள் நினைவாக இவ் யாழ்நூலினை நம் சங்கத்தின் சார்பில் வெளியிட இசைந்து, நம சங்கத்திற்குப் பெருஞ் சிறப்பளித்தார்கள். நம் சங்கம் எனத், தாமென வேற்றுமை யின்றித் தமிழ்ப் பணி புரியும் இப்பெரியோர்கட்குத் தமிழகத்தாரின் நன்றியும் வணக்கமும் என்றும் உரியவாகுக.

இவ் வரங்கேற்று விழாவில் உவகைதரக் கூடிய மற்றொரு செய்தி, நம் சென்னை மாநிலக் கல்வி யமைச்சர் உயர்திரு. T. S. அவிநாசிலிங்கஞ் செட்டியா ரவர்கள், யாழ்நூலாசிரியர்பால் வைத்த பேரன்பால், இவ்விழாவில் கலந்து பணி புரிந்தமையே யாம். கல்வி யமைச்ச ரவர்கள், தாய்மொழி யாகிய தமிழின் பால் வைத்த பேரன்பினை, இவ் விழாவிற் கலந்துகொண்டுழைத்த செயலால், இனிது புலப்படுத்தினார்கள். யாழ்நூலாசிரிய ரவர்கள் தம் வாழ்வு முழுவதையும் தமிழன்னையின் திருப்பணிக்கென்றே உரிமை செய்து வாழ்பவர்கள் என்றும், அவர்கள் பல்லாண்டுகளாக ஆராய்ந்து, நுண்ணிதிற் கண்டுணர்ந்து இயற்றிய யாழ்நூல், பழந்தமிழ்ச் செல்வத்தின் புதிய படைப்பென்றும், இசை இறைவ னருளைப் பெறுதற்குத் துணை செய்வ தென்பதனைத் திருமுறை யாசிரியர்கள் வரலாற்றால் நண்குணரலா மென்றும், அத் திருமுறைத் தமிழிசை எங்கும் பரவ இந்நூல் துணை புரியு மென்றும், எதிர்காலத் தமிழகத்தின் கலைச்செல்வமும், அவை யாவும் நிலைபெறுதற்குரிய தமிழ் மொழியும் உயர்நிலை யடைதற்குரிய தொண்டுகளைத் தம்மால் இயன்ற அளவு மேற்கொண்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் தமிழர் அரசு தமிழ்மொழியால் சீர்பெறு மென்றும், அதற்குரிய செயன்முறைகளைத் தமிழ ரனைவரும் ஒற்றுமையுடன் மேற்கொண்டு உறுதியோடு உழைக்கவேண்டு

மென்றும், அவ்வுழைப்பே நம்மை யுய்விக்குமென்றும் உணர்ச்சி ததும்பப் பேசினார்கள்.

நம் சங்க அமைச்சர், திரு. நீ கந்தசாமிப்பிள்ளை யவர்கள், அரங்கேற்று விழா நிறைவில், நன்றி கூறு முகமாகப் பேசிய சொற்கள் எல்லோ ருள்ளத்தையுங் கனியச் செய்தன. பழந் தமிழ் மக்கள் தம் தாய்மொழி யாகிய தமிழை இயல், இசை, நாடகம் என முத்திறமாக வகை செய்த திறமும், அம்முத் திறத்தினுள் நடுவணதாகிய இசை யானது எல்லாவுயிர் களையும் ஓசை யொலியெலா மாகி நின்ற இறைவன் திருவரு ளின்பத்தில் திளைத்து மகிழவைக்குந் திறமும், அம்மகிழ்ச்சி யினை இக்காலத்தாரும் எளிதின் அடைய வேண்டு மெனக் கருதிப் பல்லாண்டுகளாக இசைத் தமிழை யாராய்ந்த நம் அடிகளாரின் புலமை மாண்பும், திருஞானசம்பந்தப் பிள்ளை யார் சிதைந்த என்பினைத் தம் திருவருட் புலமையால் பூம் பாவை யாக்கியது போல, நம் அடிகளாரும், காலத்தின் சுழ லிற் பட்டுச் சிதைந்துபோன இசைக் கருவியாகிய யாழினைத் தம் திருவருட் புலமையால் உருவாக்கிச் செயற்படுத்தும் வண் ணம், இசைத்தமிழ் நூலாகிய யாழ்நூலினை வெளியிட்டுத் தெய் வத் தமிழிசை பரவச்செய்தருளிய அருண்மாண்பும் விளங்க எடுத்துரைத்தார்கள். அடிகளாரது இசைத் தமிழ் நூலினை பேரார்வத்துடன் எதிர்நோக்கி யிருந்த நம் சங்கத் தொண் டர்கள் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், வே. இராமசாமி வன்னியர் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் ச. கு. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் ஆகிய மூவரும் இவ்விழாவில் கலந்துகொள்ளாத வாறு நம்மை விட்டு மறைந்தமை வருத்தந்தருவதாயினும் அவர்கள் தம் புகழுடம்புடன் இவ்விழாவிற் கலந்து மகிழ் வார்கள் என்னுந் துணிபு தமக்கு உண்டென்றும், அமைச்ச ரவர்கள், தழுதழுத்த குரலோடு பேசிய பொழுது, நம் சங்கத்துப் பழந் தொண்டர்களின் தமிழ்ப்பணி, எம் உள் ளத்தை யுருக்கியது.

தமிழர் அரசு பெற்று உரிமையுடன் வாழ்தற் கேற்ற நுண்மாண் புலமையினையும், ஊக்கத்தினையும், உழைப் பினையும் அருட்டிரு, விபுலாநந்த அடிகளார் இயற்றி யருளிய யாழ்நூல் தமிழகத்தார்க்குத் தந்து, உய்விப்பதாகுக. யாழ் நூலாசிரிய ரவர்கள், இசைத் தமிழ்ச் செல்வத்தையும் பிறவற்

றையும், மேனாட்டவரும் உணரும் வண்ணம், ஆங்கில மொழியில், மொழி பெயர்த்துத் தமிழகத்தாரை உய்வித்தருள்வாராக. எதிர்காலத் தமிழர் ஆக்கத்திற்கு வேண்டும் புலமையூற்றாக அமைந்த அருண்மிகு அடிகளார்க்கு இறைவன் திருவருள் தளராத உடல்நலத்தினைத் தந்து, நம்மையெல்லாம் மகிழ்விப்பதாகுக.

தமிழ் வளர்ச்சியிற் கருத் தூன்றிய தமிழ் மக்களின் சார்பாக நம் கல்வி யமைச்சர் அவர்கட்கு நாம் தெரிவித்துக் கொள்ள வேண்டிய வேண்டுகோள் ஒன்றுண்டு. எத்துணைச் செல்வத்தை யிழக்க நேர்ந்தாலும், தமிழர்கள் தம் உயி ரனைய தமிழின் நிலையினைக் குறைக்க ஒருப்படமாட்டார்கள் என்பதனை, ஒன்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இந்தி யெதிர்ப்புப் போரே நன்கு தெளிவுபடுத்தும். இவ்வுணர்ச்சியின் எழுச்சியினைக் கல்வி யமைச்சர் நன்கு உணர்ந்திருப்பா ரென்றே நம்புகின்றோம். தன்னாட்சி மன்றத்தார் யாழ்நூல் அரங்கேற்று விழாவில் பேசிய நற்றமிழ்த் தொண்டர் திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள் கூறிய வீர வுரைகள் கூர்ந்து நோக்கத் தக்கன. இந்த நெருக்கடியான நாளில் நம் தமிழன்னைக்குப் பலரும் ஊறு நினைந்து, கேடு சூழவும் கூடும். தமிழ் மகன் ஒவ்வொருவனும் ஆர்ப்பரித்து முன் வந்து, நம் அன்னையின் முதன்மையையும், உயர்வினையும் காக்க வேண்டுமென்றும், தாம் முன்னணியில் நின்று போராடத் தயாராயிருப்பதாகவும் வீரத்துடன் முழக்கிய அவர்கள் சொற்கள் ஒவ்வொரு வீரத் தமிழனுடைய அறைகூவ லாகவும் கூறலாம்.

முன்னரே தெரிவித்திருந்தபடி, மொழி வழியாக மாகாணங்களைப் பிரித்தற் குரிய தொடக்க அலுவல்கள் ஆங்காங்கே நிகழ்ந்து வருவதனையும் அறிதல்வேண்டும். தாய்மொழி வழியாக அவ்வந்நாட்டு அரசியலும், பிற அலுவல்களும் நிகழ விருக்கின்றன. இந் நிலையில், நம் தமிழகத்து அமைச்சர் அவர்கள் தமிழ் அரசியல் மொழி யாதற்குரிய ஆக்க வேலைகளைத் தொடர்ந்து நிகழ்த்தல்வேண்டும். முன்னைய முதலமைச்சர் திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் மேற்கொண்ட வழியினை இப்பொழுதுள்ள கல்வியமைச்ச ரவர்கள் மேற்கொள்ளும்படி ஒருசிலர் தூண்டுதல் கூடும். அச் சூழலில் நம் அமைச்சர் சிக்கிக் கொள்ளமாட்டா ரென்றே நம்புகின்றோம். அவர்கள் இந்தி மொழியைக் கட்டாயப்படுத்த வில்லை யென்றாலும், கட்டாய

மொழிக் குரிய நிலையில், அதனைப் படித்தாலும் படிக்கா விட்டாலும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இந்தி யாசிரியரை நியமித்தல் வேண்டும் எனத் திட்டஞ் செய்திருப்பது தமிழ் மக்களுக்கு வெறுப்பை விளைக்குஞ் செயலாகும். தாய்மொழி யாகிய தமிழை முதன் மொழியாக்க அமைச்சர் அவர்கள் சொல்லிவருவது உண்மையானால், அதனை எல்லாக் கலை நிலையங்களிலும் கட்டாய மொழியாக்க வேண்டும். இந்தி மொழியைப் படிக்க விரும்புபவர்களுக்கென ஆசிரியரை யமைப்பது என்ற ஆதரவு இருப்பதுபற்றி நமக்குக் குறையில்லை. இந்தி மொழியைப் படித்தற் குரியவர்களில்லாவிட்டாலும், இந்தி யாசிரியரை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அமர்த்தவேண்டும் என்ற திட்டம் இந்தி மொழியைப் படிக்க விரும்பாதவர் களையும் படிக்கும்படி மறைமுகமாக கட்டாயப் படுத்துஞ் செயலாகவே அமைந்துள்ளது. இத்தகைய கட்டுப்பாடு தமிழ் வளர்ச்சியினைத் தடைப்படுத்து நிற்பதாதலின், இதனை விரைந்து விலக்கித் தாய்மொழி வளர்ச்சிக்கு ஆதரவு செய்யும்படி, தமி ழார்வ மிக்க கல்வி யமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கின்றேம். இந்நிலையில் தமிழ் மொழியின்பாற் பேரார்வ மிக்க தமிழ்ச் செல்வ ரொருவரே கல்வி யமைச்சராக அமைந் திருப்பது, தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி விளைப்ப தாகும். நம் மதிப்பிற் குரிய கல்வி யமைச்சர் அவர்கள், இவ்வேண்டுகோளைச் செவிமடுத்து ஆவன செய்வார்கள் என்னுந் துணிபுடையேம்.

## யாழ் நூல்

என்னும்

## இசைத் தமிழ் நூல்

அருண்மிகு விபுலாநந்த அடிகளார் இயற்றியது

விலை ரூ 15 அஞ்சற் செலவு ரூ—1

விய, தைத் திங்கட் பொழில் சருவசித்து வைகாசி நிகழ்ச்சிகளைக் கூறுதல் முரணாகத் தோன்றலாம். என்றாலும், வைகாசிப் பொழில் வெளிவர இன்னும் சிலநாள் செல்லுமாதலாலும், விய, தைப்பொழில், 15—6—1947 லே தான் வெளியிடுதலாலும், குறித்த முரண்பாட்டை அன்பர்கள் பொறுத்திடுவார்கள் என்று நம்புகிறோம்.

# யாழ் நூல் அரங்கேற்று விழா

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் அருண்மிகு விபுலாநந்த அடிகளார் அவர்கள், தாம் பதினான் காண்டுகளாக இடைவிடாது நிகழ்த்திய ஆராய்ச்சியின் பயனாக, இயற்றி யருளிய இசைத் தமிழ் நூலாகிய யாழ் நூல் அரங்கேற்றம், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், சருவசித்து, வைகாசி, உஉ, உங (5, 6–6–47), வியாழன், வெள்ளி இரண்டு நாட்களிலும், திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில், ஆளுடைய பிள்ளையார் திருமுன்னிலையில், மிகச் சிறப்பாக நிறைவேறியது. தமிழ் நாட்டிற் பல் வேறிடங்களி னின்றும் இயற்றமிழ்ப் புலவர்களும், இசைப் புலவர்களும், செந்தமிழ்ப் புரவலர்களும், அன்பர்களும், இவ் வரங்கேற்று விழாவில், ஒருங்கு குழுமி யிருந்தார்கள். அவர்களுள், சென்னை மாநிலக் கல்வி யமைச்சர், உயர்திரு. T. S. அவிநாசிலிங்கஞ் செட்டியாரவர்கள், B. A., B. L., தமிழ்ப் பேராசிரியர், நாவலர், ச. சோமசுந்தர பாரதியா ரவர்கள், M. A., B. L., சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறைத் தலைவர், ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள், B. A., B. L., தமிழ்ப் பேராசிரியர், தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள், M. A., B. L., M. O. L., சென்னைப் பல்கலைக் கழக இசைப் பேராசிரியர், P. சாம்பமூர்த்தி ஐயரவர்கள், B. A., B. L. இசைப் பேராசிரியர், திருப்பாம்புரம் T. N. சாமிநாத பிள்ளை அவர்கள், கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை யவர்கள் முதலியோர் இவண் குறிக்கத் தக்கவ ராவர்.

5—6—47, வியாழன் காலை, அருட்டிரு. விபுலாநந்த அடிகளார், திருக்கோயில் வரிசையுடன், இயற்றமிழ்ப் புலவர்களும், இசைப் புலவர்களும், ஏனைய பேறறிஞர்களும், தமிழ்ச் செல்வர்களும், புடைசூழ்ந்துவரத் தெற்குக் கோபுர வாயில்வழியாகத், திருக் கோயிலுக்கு அழைத்து வரப்பெற்றார்கள். அதுபோது, அடிகளார் யாழ் நூலிற் குறித்த கணக்கின்படி யமைந்த முளரி யாழ், சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்தண்டி வீணை யென்னு மிசைக் கருவிகள் தாங்கிச் செல்லப் பெற்றன. அழகிய நாச்சியார் திருமுன்னர், அடிகளார் இயற்றிய அழகிய நாச்சியார் நான்மணி மாலை, வித்துவான் ஔவை துரைசாமிப் பிள்ளை யவர்களாற், படிக்கப் பெற்று, அரங்கேறியது. பின்னர், திருஞானசம்பந்தப் பிள்ளையாரை வழிபட்டு,

ஆளுடைய பிள்ளையாருடன், அடிகளார் அரங்கேற்று விழா நிகழும் மண்டபத்தினை யடைந்தார்கள், தேவார இன்னிசை யுடன் அரங்கேற்று விழா இனிது தொடங்கியது. கோனூர் சமீன்தாரும், திருக்கொள்ளம்பூதூர்த்திருப்பணிச்செல்வரும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்துப் புரவலரும் ஆகிய, திருவாளர் நச்சாந்துப்பட்டி பெ. ரரம. ராம. சித. சிதம்பரஞ் செட்டியா ரவர்கள், விழாவிற்கு வந்திருந்த எல்லோரையும் பேரன்புடன் வரவேற்று, வரவேற்பு நல்லுரையை நிகழ்த்தினர்கள். கரந் தைத் தமிழ்ச் சங்க அமைச்சர், திரு. நீ. கந்தசாமிப்பிள்ளையவர் கள், பண்டை இசைத் தமிழ் மீளவும் வளம் பெற்றுப் பரவும் வண்ணம், பல் லாண்டுகளாக ஆராய்ந்து, ஆயிரம் யாண்டு களாக மறைந்து கிடந்த பழந் தமிழிசையினையும், அவ் விசை யினை யிசைத்தற் குரிய பழந் தமிழிசைக் கருவியாகிய யாழினை யும் உருவாக்கித் தந்த, யாழ் நூலாசிரியர், அருட்டிரு. விபுலாநந்தஅடிகளாரது பேரருட் டிறத்தினை வியந்து பாராட் டினர்கள். பின்பு, யாழ் நூலாசிரிய ராகிய அடிகளா ரவர்கள், யாழ்நூலை அரங்கேற்று முகமாகத், தாம் பதினன் காண்டு களாக உழைத்து, ஆராய்ந்து கண்ட இசை நூல் உண்மைகளை யெடுத்துக்காட்டி, விரிவாக விளக்கினர்கள். சென்னை மாநிலக் கல்வி யமைச்சர், திரு. அவிநாசிலிங்கஞ் செட்டியாரவர்களும், சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறைத் தலைவர், திரு. ரா. பி. சேதுப் பிள்ளை யவர்களும், அடிகளாரது தமிழ்த் தொண்டினையும், புலமை மாண்பினையும் எடுத்துரைத்துப் பராட்டினர்கள். பிற்பகல் 4 மணிக்கு, சங்கீத பூஷணம் க. பொ. சிவானந்தம் பிள்ளை யவர்கள், யாழ் நூலாசிரியர் கண்ட, பாரிசாத வீணையிலும், சதுர்தண்டி வீணையிலும், முறையே, சங்கராபரணம், அரிகாம்போதி, பந்துவராளி என்னும் நிறங் களையும், மாயாமாளவகௌளை, கானமூர்த்தி, காயகப்பிரியா, தவளாம்பரி என்னும் நிறங்களையும், இசைத்துக் காட்டி, எல் லோரையும் மகிழ்வித்தார்கள். கல்வி யமைச்சர் அவர்கள், அடிகளார் கருத்தின்படி, ‘வீணை வித்தகன்’ என்ற பட்டத் தினைத், திரு. சிவானந்தம் அவர்களுக்குப், பொற் பூவுடன், சூட்டினர்கள்.

6—6—47, வெள்ளிக் கிழமை காலை, இய லிசைப் புலவர் பேரவையில், யாழ் நூலாசிரியர் அடிகளார் வந்து அமர்ந் தார்கள். பேராசிரியர், நாவலர், ச. சோமசுந்தர பாரதியா ரவர்கள், அடிகளாரது புலமைத் தொண்டினல் நாட்டிற்கு

உளதாம் பயனை உருக்கமாக எடுத்துப் பாராட்டினார்கள். பின்னர், அவர்கள் யாழ் நூலாசிரியரைப் பாராட்டிப் பாடிய பாடல்கள் படிக்கப் பெற்றன. தமிழ் வளர்ச்சியிற் பேரார்வ முடைய, 'குமரன்' ஆசிரியர், மகளிரில்லம், சொ. முருகப்பா அவர்களும், தமிழ்ப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும், வித்துவான் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களும், அடிகளாரது முத்தமிழ்ப் புலமையினையும், அதனால் தமிழ் நாடு உய்ந்த திறத்தினையும் வியந்து பாராட்டினார்கள். பிற்பகல் 4 மணிக்குச், சென்னைப் பல்கலைக் கழக இசைப் பேராசிரியர், P. சாம்பமூர்த்தி ஐயரவர்கள், அடிகளார் யாழ் நூலிற் காட்டியுள்ள அரிய இசைக் கருத்துக்கள் சிலவற்றை யெடுத்துக் காட்டி விளக்கினார்கள். அவர்கள் குறிப்பிட்ட சில பொருள்களை, யாழ் நூலாசிரியர் அடிகளார் இனிது விளக்கிய பின்னர், வீணை வித்தகர், சங்கீத பூஷணம் க. பொ. சிவானந்தம் பிள்ளை அவர்கள், யாழ் நூலிற் கண்ட கணக்கின்படி யமைந்த சுருதி வீணையில், பண்டைத் தமிழர் இசை யுருவாகிய ஏழ்பெரும் பாலைகளைக், கிரக சுவரம் மாற்றி யிசைக்கும் முறையில், இனிமையாக வாசித்து, எல்லோரையும் மகிழ்வித்தார்கள். யாழ் நூலாசிரியர் மாணவர் வித்துவான் க. வெள்ளைவாரணனாரவர்கள், அடிகளார் தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் செய்த பேருதவியினை எடுத்துரைத்து வணங்கினார்கள். பின்னர், கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சர், திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள், இவ் விழாவினைச் சிறப்புடன் நிகழ்த்தி, யாழ் நூலை வெளியிட்ட, உயர்திருவாளர், கோனூர் சமீன்தார், பெ. ராம. ராம. சித. சிதம்பரஞ்செட்டியார் அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார், திரு. இலட்சுமணன் செட்டியார், திரு. மாணிக்கஞ்செட்டியார் ஆகியவர்கட்கும், இவ் விழாவிற் கலந்து கொண்ட கல்வி யமைச்சர் திரு. அவிநாசிலிங்கஞ் செட்டியார் முதலிய பெரு மக்களுக்கும், புலவர் பெருமக்களுக்கும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக நன்றி கூறினார்கள். திருமுறை யிசையுடன் அரங்கேற்று விழா இனிது நிறைவெய்தியது.

அன்றிரவு, மலர் புனை யோடத்தில், ஆளுடைய பிள்ளையாரை எழுந்தருளச் செய்து, திருமுறை யிசையுடனும், நாகசுர இயங்களுடனும், திருவீதி யுலா இனிது நிறைவேறியது.

தமிழ்

## அருட்டிரு விபுலானந்த அடிகளார்

# யாழ்நூல் அரங்கேற்றுவிழா வாழ்த்து.

இஞ்ஞாலத் தொன்மொழிநல் லியற்றமிழிற் பெரும்புலவர்
விஞ்ஞான வித்தகர்பேர் விபுலானந் தப்பெரியார்
மெய்ஞ்ஞானி மேதினியில் மிகப்பழைய தமிழிசையின்
அஞ்ஞான மகலஅதன் அழகியல்நூல் ஆக்கினரால்.

இறந்ததமிழ் யாழைஉயிர்த் தெழஅதனில் ஏழிசையும்
பிறந்துசெவிக் கின்னமுதம் பெயக்கோத்தார் பிறர்வாழத்
துறந்தெவரும் துய்க்கநலம் தொடுக்கும்அறக் கடன்பூண்டோர்
மறந்தஇசை மறைதமிழில் வழங்கிடயாழ் நூல்யாத்தார்.

பழமதுரைப் புதுச்சங்கப் பண்டிதர்பே ராசிரியர்
பழமுதிர்தண் பொழில்தழையும் பதிகொள்ளம் பூதூரில்
பழவிடையன் மகன்உமைபால் வழிவாயன் மகிழ்தமிழ்ப்பண்
அழகவிர யாழ்நூலை ஆக்கிஅரங் கேற்றினரே.

ஆழத்தென் மாக்கடலில் அலைமடியில் வளர்இலங்கை
ஈழத்துத் தமிழ்வாணர், யாழ்ப்பாணர் இசைப்புலவர்
வாழத்தொல் தமிழ்ப்பண்ணின் வரலாற்றை வரம்பறுத்தார்
வேழத்தோன் கூத்தன்அடி நீழலிலே விருப்பமிக்கார்.

சோமனைத்தன் வேணியணி சொக்கரடிக் கன்பர்என்றும்
காமனையே வென்றமுனி காலத்தை வென்றதமிழ்
ஏமமுற இயல்இசைகூத் திலக்கணநூற் கெல்லையிட்டார்
நாமமொடிந் நாவலர்நூல் நானிலம்நா ளும்வாழ்க.

திருக்கொள்ளம்பூதூர், }
6—6—1947. }

ச. சோமசுந்தர பாரதியார்,
M. A., B. L.

உ

தமிழ்த்தாய் வாழ்க

## யாழ்நூல் அரங்கேற்று விழா
## வரவேற்பு நல்லுரை.

யாவருக்கும் தந்தை தாய் ஆகிய எம்பெருமானையும், எம்பிராட்டியையும், உள்ளத்து இருத்தி, இங்கு எழுந்தருளி யிருக்கும் முத்தமிழ் விரக ராகிய ஆளுடைய பிள்ளையார் திருவடிகளை வணங்கி, இவ்வருள் நிலையத்திற் கூடியுள்ள இய லிசைப் புலவர் பேரவையினர்க்கு என் உளமார்ந்த வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செந்தமிழ்ச் செல்வர்களே,

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தப் பிள்ளையார் திருநாளாகிய இந்த நல்ல நாளிலே, திருக் கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலாகிய இவ் வருள் நிலையத் திலே, தமி ழன்னையின் திருப்பணியில் பெரு விருப்புடைய இயற் றமிழ்ப் புலவர்களும், இசைப் புலவர்களும், தமிழன்பு கெழுமிய ஏனைய தமிழ்ப் பெருமக்களும் ஒருங்கு குழுமி யிருக்கும் இவ்வழகிய தோற்றம், தமிழன்னையின் திருவோ லக்கச் சிறப்பினை யினிது புலப்படுத்தி, என் உள்ளத்திற்குப் பெருமகிழ்ச்சி தருகின்றது.

ஞானத்தின் திருவுரு வாகிய ஞானசம்பந்தப் பிள்ளையார், திருக்கொள்ளம்பூதூர்ப் பெருமானைப் பாடிப் போற்றும் பெரு விருப்பினால் இங்கு எழுந்தருளி வருங் காலத்து, ஆற்றிலே பெருவெள்ளம் ஏற்பட்டு, ஓடத்தினைச் செலுத்துவோர் இல்லாத நிலையிலே,

கொட்டமே கமழுங் கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தையார் தொழ
நல்கு மாறருள் நம்பனே

என்னும் இன்னிசைத் திருப்பதிகத்தினைப் பாடிக், கரையில் நின்ற ஓடத்தினைக் கட்டவிழ்த்து, தம் நாவலமே கோலாகச் செலுத்தி, ஆற்று வெள்ளத்தைக் கடந்து, இத் திருக்கோ யிற் பெருமானைக் கண்டு மகிழ்ந்ததுபோல, நம் அருட்டிரு. விபுலாநந்த சுவாமிகளும், பிள்ளையார் அருளிய இன்னிசைச்

செழும் பாடல்களை யிசைத்து, நல்லிசை வளர்த்த **திருநீல கண்ட யாழ்ப்பாணனாரது** இசைக் கருவி யாகிய **செம் முறைக்கேள்வி** யென்னும் சகோட யாழின் இயல் பினைக் காண விரும்பிக், கால மென்னும் பேராற்று வெள்ளத்தினைத் தம் கணித நூற் புலமை யாகிய கோலினாலே கடந்து, பண்டைத் தமிழர் இசைக் கருவி யாகிய **யாழின்** இயல்பினையும், அக் கருவியில் இசைக்கப் பெற்ற இசைத் தமிழ்த் திறங்களையும் கண்டு மகிழ்ந்து, அம் மகிழ்ச்சியால் விளைந்த பயனைத் தமிழகம் பெற்றுய்தல் வேண்டு மென்னும் பெருங் கருணையினாலே, இசைத் தமிழ் நூலாகிய **யாழ்நூலை** இயற்றி யுதவி யுள்ளார்கள்.

முடியுடை மூவேந்தர்களாலும், குறு நில மன்னர்களாலும், வள்ளல்களாலும், போற்றி வளர்க்கப் பெற்ற தமிழ் மொழி யானது, புலவர், பாணர், கூத்தர் என்போரால் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று துறைகளிலும் வளர்ச்சிபெற்றுத் திகழ்ந்தது. பண்டைத் தமிழர்களுடைய மன, மொழி, மெய்களின் ஆற்றலை மிகுவித்து விளங்கிய இம் முத்தமிழ்த் துறையினைப், பிற்காலத்தே உரிமை யிழந்த மக்கள் பேணு தொழிந்தனர். அவர்களாற் பேணப் படாது, மறைந்துபோன, இசைத் தமிழ் என்னும் அருங் கலை நிதியத்தைத் தேடித், தொகுத்து, உருப்படுத்தி வழங்கிய பெருமை **யாழ்நூ**லாசிரிய ராகிய நம் சுவாமிகளொருவர்க்கே உரிய தாகும்.

தமிழன்னையின் கலைத் திறங்களாகிய பழம் பணி புதுக்கியும், புதுப் பணி குயிற்றியும், தமிழகம் தன்னரசு பெற்று உழைத்தற் கேற்ற ஊக்கத்தினை, அடிகளார் அருளிய **யாழ்நூல்**, தமிழ் மக்களுக்கு வழங்குவ தாகும் என்னுந் துணி புடையேன்.

தமிழ் மக்கள், தன்னரசு பெற்று, உரிமையொடும் வாழ்ந்த முன்னாளில், முத்தமிழ்த் துறையின் முறை போகிய வித்தகப் புலவர்கள் இயற்றிய தமிழ் நூல்கள், அரசர் பேரவையிற் சிறப்புடன் அரங்கேறின என அறிகின்றோம். **ஆசிரியர்** தொல்காப்பியனாரால் இயற்றப்பெற்ற முழு முதல் நூலாகிய தொல்காப்பியம், நிலந்தரு திருவிற் **பாண்டியன்** அவையில், அதங்கோட்டாசான் என்னும் பேராசிரியர் முன்னிலையிலே, அரங்கேறிய தென அறிகின்றோம். தமிழரது அரசியல் உருப் பெற்று வரும் இக்

காலத்தே, நம் சுவாமிகள் இயற்றிய இசைத் தமிழ் நூலாகிய யாழ்நூலானது, முழுமுதற் கடவுளின் பேரவை யாகிய திருக்கொள்ளம்பூதூர்த் திருக் கோயிலிலே, இய, லிசைத் தலை வராகிய ஆளுடைய பிள்ளையார் திருமுன்னிலையிலே, அரங்கேறப் பெறுகின்றது. ஆயிரம் யாண்டுகளாக நம் முன்னோர் பெறுத பெருமகிழ்ச்சியினை, யாழ்நூல் அரங் கேற்றுவிழா வாகிய இந்நாளிலே, நாம் பெற்று மகிழ் கின்றோம். இம் மகிழ்ச்சியினை நம் தமிழகத்தார்க்கு வழங்கி யருளிய இறைவன் திருவருளை யிறைஞ்சி நின்று, இவ்வரங் கேற்று விழாவினைச் சிறப்பிக்க வேண்டும் என்னுந் தமி ழார்வத்தால், தமிழகத்துப் பல்வேறு இடங்களி னின்றும் வந்து குழுமிய தமிழ்ப் பேரறிஞர்க ளாகிய உங்கள் அனை வரையும் என் உளங் கனிந்த அன்புடன் வரவேற்கின்றேன்.

யாழ்நூ லாசிரிய ராகிய சுவாமிகள், தாம் பதினன்கு ஆண்டுகளாக ஆராய்ந்து கண்ட இசை முடிபுகளை, நம் மனோர்க்கு எடுத்துரைக்கும் பெரு விருப்புடன், இங்கு வீற்றிருக்கின்றார்கள். அருளுரு வாகிய சுவாமிகள், இன்று, இங்கு, எழுந்தருளப் பெற்றது, தமிழ் மக்களின் தவப் பேறே யாகும். நமது நிகழ்காலச் செய லாகிய இப் பேற்றி னால், நம் தமிழகத்தின் சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும், இனி யெதிர் காலத்தின் சிறப்பும் நமக்கு இனிது புலனாகின்றன. சுவாமிகள் கண்டுணர்த்திய கணக்கின்படி, புதுவதாக அமைக்கப்பெற்ற முளரியாழ், சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்தண்டி வீணை என்னும் இசைக்கருவி கள் இங்கு உள்ளன. அரங்கேற்று விழா நிகழும் இவ் விரண்டு நாட்களிலும், யாழ்நூ லாசிரியராகிய நம் சுவாமி கள், பண்டைத் தமிழர் கண்டுணர்ந்த இசை நுட்பங்களை யெடுத்து விளக்கு வார்கள். யாழ்நூ லாராய்ச்சியிற் கண் டுணர்ந்த பழந் தமிழிசை யுருவங்கள் சிலவற்றைச், சங்கீத கலாநிதி திரு. பொன்னையா பிள்ளை யவர்களின் புதல்வர், சங்கீத பூஷணம் திரு. க. பொ. சிவானந்தம் பிள்ளையவர் கள், அடிகளார் கருத்தின்படிப், புதிய இசைக் கருவிகளில் இசைத்துக் காட்டுவார்கள்.

தமிழகத்தாரால் நன்கு மதிக்கப்பெற்ற பெரும் புலவர் களும், இசைவாணர்களும், எமது வேண்டுகோட் கிணங்கி, இவ் வரங்கேற்று விழாவினைச் சிறப்பிக்க முன்வந் துள்ளார்கள்.

நல்லிசை ஞானசம்பந்தர் அருளிய தேவாரத் தமிழில் ஈடுபட்டு, இத் திருக்கொள்ளம்பூதூர்த் திருப்பணியினை ஆர்வத்துடன் நிறைவேற்றிய என் தந்தையா ரவர்களின் பேரன்புக்குரிய நிலைய மாகிய இத் திருக்கோயிலிலே, இசைத் தமிழ் நூலாகிய யாழ் நூலினை அரங்கேற்ற இசைந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்க்கு என் உள மார்ந்த நன்றி யுரிய தாகுக.

எமது வேண்டுகோட் கிணங்கித், தமக் குரிய பல்வகை அலுவல்களையும் பொருட்படுத்தாது, செந்தமிழ்த் தாயின் திருவடித் தொண்டினையே பெரி தெனக் கருதி, இவ் விழா விற்கு வந்துள்ள தமிழ்ப் பெருமக்க ளனைவர்க்கும் எம் உளமார்ந்த நன்றி தெரிவிக்கின்றேன்.

யாழ்நூல் அரங்கேற்று விழாவினைச் சிறப்பிக்க வந்த பெரியோர்களுக்கு வேண்டும் வசதிகளை, இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப, எங்களால் இயன்ற அளவு செய்துள் ளோம். உபசரித்துப் போற்றும் வகையில் நாங்கள் அறியாத குறைபாடுக ளிருத்தல்கூடும். அவற்றை உளங் கொள்ளாது, இவ் விழாவினை நன்கு சிறப்பித் தருளும் படி, தமிழ்ப் பெருமக்களை வேண்டிக்கொள்கின்றேன்.

ஞாலம் நின்புகழே மிக வேண்டுந் தென்
ஆலவாயி லுறையுமெம் ஆதியே.

திருக்கொள்ளம்பூதூர்,
சருவசித்து, வைகாசி, உஉ
5—6—1947.

பெ. ராம. ராம. சித.
சிதம்பரம் செட்டியார்
கோனூர் சமீன்றார்

# கரந்தைப் புலவர் கல்லூரி.

## மகிழ்ச்சி யுரை.

சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் (புலவர்) **1946-47** ஆம் ஆண்டுத்தேர்ச்சியில், முடிநிலை, முதனிலை, புகுநிலை எனும் மூன்று பிரிவுகளினும், இக்கல்லூரி சிறந்த தேர்ச்சியுற்றிருத்தலை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

### தேர்ச்சி நிலை.

| பிரிவுகள் | சென்ற மாணவர் எண் | முதல் வகுப்பு | இரண்டாவது வகுப்பு | மூன்றாவது வகுப்பு | ஆகத் தேர்ச்சி பெற்றோர் எண் | வெற்றி அளவு % |
|---|---|---|---|---|---|---|
| முடிநிலை | 14 | 3 | 4 | 6 | 13 | 93 |
| முதனிலை | 12 | 1 | 1 | 10 | 12 | 100 |
| புகுநிலை | 12 | ... | ... | ... | 9 | 75 |

இக்கல்லூரியின் தலைவர், ஆசிரியர்களின் புலமை, திறமைகள், மாணவர்களின் ஊக்கம், பயிற்சிகள் ஆய சிறப்புக்களை, இவ்வெற்றி நன்கு புலப்படுத்துகின்றது.

இக்கல்லூரி மாணவர்கட்கு, வேண்டும் உணவு, விளக்கு முதலியன அளித்துப் போற்றிவரும் பெருங்கொடைத்திருவாளர்களுக்கு நம் சங்கத்தின் பெரு நன்றி செலுத்துகின்றோம்.

# கரந்தைப் புலவர் கல்லூரி.

## சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு முடிபு.

| | அனுப்பப்பெற்றவர் | | வெற்றிபெற்றவர் | வெற்றி அளவு |
|---|---|---|---|---|
| | | | புகு நிலை | % |
| 1945 | 8 | | 7 | 88% |
| 1946 | 7 | | 6 | 86% |
| 1947 | 12 | | 9 | 75% |
| | | | முதனிலை | |
| 1945 | 13 | | 9 | 69% |
| 1946 | 12 | | 10 | 83% |
| 1947 | 12 | | 12 | 100% |
| | | | முடி நிலை | |
| 1945 | 6 | I—1 | | |
| | | II—2 | | |
| | | III—2 | 5 | 83% |
| 1946 | 13 | I—3 | | |
| | | II—1 | | |
| | | III—6 | 10 | 77% |
| 1947 | 14 | I—3 | | |
| | | II—4 | | |
| | | III—6 | 13 | 93% |

## முடிநிலைத் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்கள்.

### 1947

| | | |
|---|---|---|
| 1. | K. P. கண்ணன் | முதல் தரம் |
| 2. | N. குப்புசாமி | ,, |
| 3. | N. R. சுந்தரராசன் | ,, |
| 4. | A. N. ஆதிமூலம் | இரண்டாம் தரம் |
| 5. | A. சின்னண்ணன் | ,, |
| 6. | S. மணிவாசகன் | ,, |
| 7. | N. சுந்தரம் | ,, |
| 8. | C. குருசாமி | மூன்றும் தரம் |
| 9. | V. சயராமன் | ,, |
| 10. | V. குமாரசாமி | ,, |
| 11. | N. மீனுட்சிசுந்தரம் | ,, |
| 12. | K. சண்முகம் | ,, |
| 13. | D. சுப்பையன் | ,, |

# பாண்டித்துரைசாமித் தேவர்

வித்துவான் திரு. க. வெள்ளைவாரணர்.

தமிழ் வளர்த்த குறு நில மன்னர்களில் சேது வேந்தர் தலை சிறந்தோராவர். இவ்வேந்தர் குடியிற் புகழுடன் தோன்றியவரும், சேதுநாட்டு அரசியல் வினைகளைச் சீர்பெற நிகழ்த்திய அரசியலறிஞரும் ஆகிய பொன்னுச்சாமித் தேவரவர்களின் இளம் புதல்வராக, இற்றைக்கு எழுபதாண்டுகளின் முன், தோன்றியவர், பாலவனத்தம் சமீன்தார் பாண்டித்துரைச் சாமித் தேவராவர். பாலையம்பட்டி சமீன்தார் சீமைச்சாமித் தேவரும் கோட்டைச்சாமித் தேவரும் தேவரவர்களின் உடன் பிறந்தோராவர். பாண்டித்துரைத் தேவர்க்கு மனைவியிருவரும் புதல்வரொருவரும் உண்டு.

தேவரவர்கள், தம் தந்தையாரைப் போலவே, நிரம்பிய தமிழார்வமும், செந்தமிழ்ப் புலமையும், படைத்தவர். திருவாவடுதுறை யாதீனத்துப் பழனிக்குமாரத் தம்பிரான் சுவாமிகளிடம் அரிய தமிழ் நூல்களை முறையாகப் பயின்றவர். ஆங்கிலத்திலும் போதிய பயிற்சி பெற்றுக் கலை வளர்ச்சியிற் றலைசிறந்து விளங்கியவர்.

நாற்பத்தாறு ஆண்டுகளின் முன்னர் மதுரையில் அரியதொரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. 1901-ஆம் ஆண்டில், சென்னை மாகாணக் காங்கிரசு மாநாடு மதுரையிற் கூடியது. அம் மாநாட்டில் தேவரவர்கள் வரவேற்புக் கழகத் தலைவராயிருந்தார். நாட்டுப் பணியி லீடுபட்ட அவரது உள்ளம், மூவேந்தராட்சியிலும் உரிமை பெற்று விளங்கிய பழைய தமிழ் நாட்டின் உயர்வினை யெண்ணியது. தாய் மொழி வளர்ச்சியே தாய் நாட்டு வளர்ச்சியா மென்பதும் மொழிப்பற்றின்றி நாட்டுப்பற்று நிலைபெற முடியாதென்பதும் தேவரவர்க ளுள்ளத்தே நன்கு புலனாயின. தமிழரிற் பலர், தமிழ் மொழியிற் பற்றின்றி, நாட்டு விடுதலையை மட்டும் எதிர்பார்த்து நிற்பதில் ஒரு பயனுமில்லை யெனத் தேவரவர்கள் தெளிய வுணர்ந்தார்கள்.

'தற்காலத்தே நம்மவரது பாஷாபிமானத்தின் நிலை மிகவும் பரிதபிக்கத் தக்கதே. சுருங்கச் சொல்லின் தேச பாஷையின் வளர்ச்சியின்றி நாம் பெருமையை எதிர்பார்த்தல், ஆடையின்றி அலங்கரித்தலை யொக்குமன்றோ' என்பது தேவரவர்கள் உய்த்துணர்ந்து கூறிய தெளிவுரை யாகும். இவ்வாறாகத் தமிழ் வளர்ச்சியால் தமிழ் நாட்டு அரசியலை உருப்படுத்த எண்ணிய தேவரவர்கள், காங்கிரசு மாநாட்டிற்கு வந்த தமிழறிஞர்களையும்

புலவர் பெருமக்களையும ஒருங்கு கூட்டி, 1901-ஆம் ஆண்டு, மே மாதம், 24-ஆம் நாள், மதுரையில் தமிழ்ச் சங்கம ஒன்றை நிறுவினார்கள். பாண்டியர்கள் நிறுவிய முதல், இடை, கடை யென்னும் சங்கங்களுடன், இத் தமிழ்ச் சங்கமும நான்காஞ் சங்க மென எண்ணப்பெறுஞ் சிறப்புடைய தாயிற்று. செயற் கரிய இச் செயலைச் செய்தமை பற்றியே, தேவரவர்களை உக்கிர பாண்டியன் எனத் தமிழறிஞர் பாராட்டுவா ராயினர்.

நம் தேவரவர்கள், சங்கத்தின் சார்பில், செந்தமிழ் என்னுந் திங்க ளிதழைத் தொடங்கி நடத்தினார்கள். பாற்கர சேதுபதி யவர்களின் ஆதரவு கொண்டு, சேதுபதி செந்தமிழ்க் கலா சாலையை நிறுவினார்கள். சங்கத் தமிழ் நூல்களை நன்கு கற்ற புலவர்களைச் சோதித்துப் பட்டம் வழங்கப், பண்டிதத் தேர்வினை யமைத்தார்கள். ஆண்டு தோறும் சங்க விழாக் கொண்டாடிப், புலவர்களை வரவழைத்து, அவர்தம் பொருளுரைகளைப் பலருங் கேட்டுத் தெளிவுறச் செய்தார்கள். ஊர் தோறும சென்று, அறிஞர் பேரவையில் செந்தமிழ் நூல்களின் நயத்தினை விளக்கி, நாளும இன்னிசையால் தமிழ் பரப்பினார்கள். தமிழ்ப் புலவர்களை நன்கு மதித்து ஆதரித்தார்கள்.

தேவரவர்களால் வளர்க்கப்பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்பினையும் சங்கத் தலைவ ராகிய தேவரவர்களின் சால்பினையும் குலாம் காதிர் நாவல ரவர்கள், தாம் இயற்றிய மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராற்றுப்படை யென்னுஞ் செழுந் தமிழ்ப் பாட்டில், நயம்பெற விளக்கியுள்ளார்கள். தேவரவர் களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இப் புலவராற்றுப் படை, நாவல ரவர்களின் புலமையினையும், தேவரவர்களின் பெரு மாண்பினையும் இனிது விளக்குவ தாகும்.

பாண்டித்துரை யவர்களின் புலமைத் தொண்டு, நூற் பதிப்பு, ஆராய்ச்சி, செய்யு ளியற்றல், சொற்பொழிவு செய்தல் எனப் பல திறத்தானும் இனிது நடைபெற்றது. நற்பொருள் களைப் பற்றிப் புலவர் பலர் பாடிய செய்யுட்களைத் தேர்ந்தெடுத் துப், பன்னூற்றிரட்டினைத் தொகுத்து உதவினார்கள். இவ்வாறே சைவ சமய ஒழுகலாறுகளைக் குறித்துச் சைவமஞ்சரி யென்னும் நூலையும் தொகுத்தளித்தார்கள். நாற்கவிராச நம்பி யகப் பொருள் முதலிய நூல்களைத் தாமே ஆராய்ந்து, திருத்தமுற வெளியிட்டார்கள். புறப்பொருள் வெண்பா மாலை, மணிமேகலை என்ற நூல்கள் வெளிவருதற்கு வேண்டிய வுதவிகளைச் செய்தார்கள். அநுமான விளக்கம் முதலியவற்றை அறிஞர் களைக் கொண்டு ஆக்குவித்தார்கள்.

வரலாற்று முறையில் நின்று தமிழர் வாழ்வினைச் செப்பஞ் செய்ய எண்ணித், தமிழ்ப் பழஞ் சரிதம் என்னும் ஆராய்ச்சி

யுரையினைச் செந்தமிழில் வெளியிட்டார்கள். கம்பராமாயணம் முதலிய காவியங்களிற் றிளைத்துத், தாம் கண்ட நயங்களைச் சொற்பொழிவு வாயிலாகப் பலரும் உணரச் செய்தார்கள். 'கண்டனன் கற்பினுக் கணியை' எனும் இராமாயணப் பாடலை நயம்பெற விளக்கிய கட்டுரை படித்து மகிழ்தற் குரிய தாம்.

தமிழும் சைவமும் தழைக்கப் புலமைத் தொண்டு செய்த அறிவுப் பெருஞ் செல்வர் சிவஞான முனிவ ராவர். அம் முனிவரையே வழிபடுந் தெய்வமாகக் கொண்டவர் நம் பாண்டித் துரைத் தேவர். முனிவ ரவர்கள் தமிழ் வளர்ச்சியிலும் சமய வளர்ச்சியிலும் ஈடுபட்டுப், பாட்டும் உரையும் இயற்றித் தமிழ் மொழியினை எவ்வாறு வளர்த்து வந்தார்களோ அவ்வாறே தேவரவர்களும் தம் புலமைத் திறத்தால் தமிழ் மொழியினை வளர்த்தார்கள்.

சிவஞான முனிவர்பால் வைத்த பேரன்பினுல், அம் முனிவரது நூற்றிருபதாவ தாண்டுத் திருநட்சத்திரத்தில், சிவஞானசுவாமிகள் இரட்டைமணி மாலை என்னும் பிரபந் தத்தினைப் பாடி, மதுரைத், தெற்கு ஆடி வீதியில் தாம் நிறுவிய சைவப் பிரகாச சபையில், அரங்கேற்றினுர்கள். மேலும், முனிவரவர்களைக் குறித்த பிற தனிப் பாடல்களும், சிவஞானபுரங் காவடிச் சிந்தும், வேறு சில பிரபந்தங்களும் இயற்றியுள்ளார்கள். அவற்றுள் ஒருசிலவற்றை நோக்கு வோமாக.

உலக மக்கள் தாம் வேண்டும் பேறுகளைச் சிவஞான சுவாமிகள் வாழ்க்கையொடு தொடர்பு படுத்தி நினைக்க வேண்டு மென்பார்,

நற்பாலர் வேண்டின் மயிலம்மை யார்தவம் நாடுகநூல்
கற்பா னசையிற் சிவஞான தேவன் கலையுணர்க
சொற்பா லறத்துற வுன்னிலன் ஞனிற் றுறக்கவிப்பா
ரிற்போகம் வேட்கிற் சிவபோக மேவிரைந் தெய்துகவே.

என அறிவுறுத்துகின்றுர். நல்ல பிள்ளைகளைப் பெற விரும் புந் தாய்மார்கள், மயிலம்மையார் சிவஞான முனிவரை மக வாகப் பெறுதற்குச் செய்ததவத்தினை மேற்கொள்வாராக; உறுதி நூல்களைக் கற்க விரும்புவோர், சிவஞான முனிவர் அருளிய தமிழ்நூற் கலைகளை நன்கு பயில்வாராக; கற்று முற்றியதன் பயனுகத் துறவு நிலையை விரும்புவோர், முனி வர் சென்ற நன்னெறியே ஒழுகுவாராக; இவ்வுலகில்

ஈறில்லாப் பேரின்ப நிலையை யடைய விரும்புவோர், அம் முனிவர் அருளிய மெய்யுரைப்படியே உணர்வின் நேர் பெற வருஞ் சிவபோகத்தினை அறிந்து அநுபவிப்பாராக; என விளக்கிய திறம் நினைந்து மகிழத் தக்கதாம்.

சமண சமயத்தவ ராகிய பவணந்திமுனிவர் செய்த நன்னூலுக்குத் திருத்தமான உரை வரைந்து சிறப்பித்துச், சைவப் பெரியா ராகிய வைத்தியநாத நாவலர் செய்த இலக் கண விளக்கத்துக்குச் சூருவளி யாகிய மறுப்பெழுதித் தாழ்த்திய சிவஞான முனிவரை நோக்கி,

ஒன்னூர்த் தெறல்செய் துவந்தார்க் கருள்தவ முன்கண்ணதே
என்னு மொழிவர் சிவஞான தேவ இசைந்தசைவ
மன்னு வலன்செய் யிலக்கணஞ் சூரு வளியுறுத்தி
யுன்னுப் பவணந்தி நூலினி தாக்கலென் னேர்கிலனே

என வினவுகின்றார். இதன்கண், சைவ சமயச் சான்றோ ராகிய வைத்தியநாத நாவலர் செய்த பெருநூலை முனிவர் இகழ்ந்துரைத்தல் தகா தென்னும் தம் கருத்தை முனிவ ரிடம் தேவர் குறிப்பினால் வெளிப்படுத்திய திறம் பாராட் டத் தகுவதாம்.

தேவரவர்கள், தம்மால் இடைவிடாது தியானிக்கப் பெறும் சிவஞான முனிவர் புகழுருவினைத் தாம் கண்டவாறு நம்மனோர்க்குத் தெரிவிக்கின்றார்கள்.

கலைதேர் நமச்சி வாயகுரு கருணைக் கடலிற் றிளைத்தாடிக்
கலகப் பாசத் தொடரறுத்துக் காமத் தறியை யறவீழ்த்தி
யலையுஞ் சமய தருக்களைக்கீ முடிவே ரோடு மகழ்ந்தெறிந்திட்
டருளின் படாத்தை முகமேற்கொண்டாதி வேதா கமங் ளெனுந்
தொலையாமணிக ளிருமருங்குந் தொனிக்கச் சைவமதம் பொழிந்து
துங்க மோடு முலகமுற்றுஞ் சுற்றும் வெற்றி வாரணமே
மலையா தருளு முனிவர்சிகா மணியே வருக வருகவே
வளமார் துறைசைச் சிவஞான வள்ளால் வருக வருகவே

என்பது அப்பாடலாகும். சிவஞான முனிவ ராகிய வெற்றி மிக்க யானை, திருவாவடுதுறையில் எழுந்தருளிய நமச்சி வாய தேசிகரது பெருங்கருணைத் தடங்கடலிற் படிந்து விளையாடிக், கலகத்தை விளைக்கும் பாசமாகிய சங்கிலியை அறுத்து உதறிக், காமமாகிய கட்டுத் தறியை முறித்துப்,

பரசமயமாகிய மரங்களைச் சாய்த்து வேரொடும் பிடுங்கி, அருளென்னும் முக படாத்தை அணிந்து, வேதம், ஆகமம் என்னும் மணிகள் இருமருங்கும் ஒலிப்பச், சைவமதமாகிய ஞானநீரைப் பொழிந்து, உலக, மெங்கும் வெற்றிக் களிப் பால் உலவும் உயர்ந்த தோற்றத்தினைத், தம் உளக்கண்ணுற் கண்டு மகிழ்ந்த பாண்டித்துரைத்தேவரவர்கள், அவ்வழகிய காட்சியினை நாமுங்கண்டு மகிழச் சொல்லோ வியத்தால் புனைந்து காட்டுகின்றுர்கள்.

இங்ஙனம் புலமைத் திறத்தாற் பாட்டும் உரையும் இயற்றிப், பண்டைப் பாண்டியர்போற் கவியரங்கேறிப், பெரும் புலவராய் விளங்கிய பாண்டித்துரைச்சாமித் தேவ ரவர்கள் பத்தாண்டுகளாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் பாதுகாத்துப் போற்றித், தமது நாற்பத்தைந்தாம் வயதில், தமிழர்களின் தவக்குறையினுல், திடீரென இறைவன் திருவடியிற் கலந்து மறைந்தார்கள். இவர்களது பிரிவினுல் உளங் கலங்கிய புலவர் பெருமக்களின் இரங்கற்பாக்கள் கன்னெஞ்சத்தினரையும் கனிவிக்கும் நீர்மையன தேவ ரவர்களின் வாழ்க்கையிற் காணப்படுஞ் சால்புகளை இனிது விளக்குஞ் சொல்லோவியமாகவும் இவ்விரங்கற் பாடல்கள் அமைந்துள்ளன. தேவரவர்களின் புகழுருவினைப் புலவ ரொருவர் பின்வருமாறு பாராட்டி யுருகுகின்றுர்.

சித்திரத்தி னீயிருப்பாய் சிந்தையுளே வீற்றிருப்பாய்
சிறப்பாச் செய்த
புத்தகத்தி னீயிருப்பாய் புலவர்கள்தம் பாவிலெலாம்
புகழாய் நிற்பாய்
பத்திரிகை தனிலிருப்பாய் தமிழ்ப்பாண்டித் துரைவேந்தே
பாரி லெங்கும்
நித்தியமாய் இருக்குநினை நிலங்கடந்தா னென்றுலகர்
நிகழ்த்த லென்னே.

என இங்ஙனம் புலவர் பாடும் புகழுடைய பாண்டித் துரைத் தேவரவர்களின் தமிழ்த் தொண்டினை யுளங் கொண்டு தமிழ்நாடு உய்தி பெறுவதாகுக.

---

# குயத் தொழிலும் பொருணுவணையும்

## (POTTERY AND PHYSICS)

(த. பு. நவநீதகிருட்டினன், அண்ணுமலைநகர்)

"செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல்." (திருக்குறள்.)

குயத் தொழிலானது மக்களிடை தொன்று தொட்டு நிலவி வந்துள்ளது. கைப்பழக்க முறைகளைக் கொண்ட தேர்ச்சியின் வாயிலிலேயே, அஃது உயர்ந்த கலைத்திற னுடையதாய்ச் சிறந் திருப்பது. ஆயினும், பாண்டங்களைச் சுடல், அவற்றைப் பள பளப் பாக்கல், இன்னோ ரன்னவற்றை யொட்டிய இயைபிய லான (chemical) செய்திகள் பலவுள. பாண்டங்களைச் சுடு தற்கு முன்னுக அவற்றை உருவாக்கல், களிமண்ணைத் தக்க பத னுக்கல், சூளைகளை அமைத்தல், இன்னோ ரன்னவை செய்யப்படு வன. அவை பொருணுவணை (Physics) அறிவின் பாற்பட்ட செய்திகள் பலவற்றைக் கொண்டிருப்பன. அங்ஙனம் விதித் தகை யான தெரியற் செய்கையினின்று (Science) செயற் சிறப்பு அடைதற் கான முறைகள் பெறப்படுவன என்பதைப் பாண் டங்க ளமைத்து விற்கும் வணிகத் துறையில் மேலைநாடுகளில் இன்று ஈடுபட்டுள்ள பலர் அறிவார். ஆதலால், அன்னுர் பாண்ட வமைப்புப் பொருள்களின் தகவுகளைப் பொறுத்த திட்ட வளவைகளைப், பொருணுவணைச் சோதனைகளின் வாயி லாய்க் காண விரும்புகின்றனர்.

நிலத்தி லமைந்த மண்ணின் திறங்கள் வேற்றுமையான பலவாய் இருப்பன எனக் காணப்படுவன. ஆயினும், இயைபுக் கெழுமலைப் (Chemical Constitution) பொறுத்து, அவற்றின் நுணித்தல்கள் மிகவும் வேறுபட்டன வல்ல. நிலமட்டத்திற்குக் கீழ் சிறிதளவு ஆழமான பாங்கர்களி லுள்ள மண்வகைகள் அனைத்திலும் பெரும் பகுதிக்கு, சுண்ணயக் கரியேற்றும் (Calcium Carbonate) அயிரிய ஈருருயிரியும் (Silicondi-oxide) இருப்பன. சிறிதளவுக்குச் சீனய உயிரி (Aluminium oxide) இரும்பு உயிரி (Iron oxide), காந்தய உயிரி (Magnesium oxide) முதவானவையும் உள்ளன. ஆனல், இவ்வுயிரிகள் எல்லாம் எல்லா வகை மண்களிலும் இருப்பனவல்ல. அவற்றில் சில ஒருவகை மண்ணிலும், இன்னும சில இன்னெரு வகை மண்ணி லும், இன்னும் சில இன்னெரு வகை மண்ணிலும், என்றவாறு யிருப்பன. ஆகவே, மண்வகை யொன்று கொண்டுள்ள உயிரி வகையைப் பொறுத்தவாறு, அதன் தரமும் நிறமும் அமைவன.

இன்னும், மண் வகைகளை யொட்டி, அவற்றின் பொடிகளின் நடுத்தரவணியான (Avearge) பருமனளவுகளும் வேறுபடுவன. அவ் வளவைகள், பருக்கைக் கல்லினளவு முதல் பாறைத் தூள்களான நுண் தூசிகள் வரை வேறுபட்டனவா யிருக்கலாம். இவ்வாறுன நுண் தூசிகள் நம்முலகை வேய்ந்துள்ள காற்றுப் பரவையில் மிதந்து பறந்துகொண்டிருக்கும் வகையைச் சார்ந்தனவாம்.

நிலவகை யீட்டு முறையை விரிக்கும் நூன் முறையையொட்டி, 0.2 மில்லிமீட்டருக்கும், 2 மில்லிமீட்டருக்கும் இடைப்பட்ட அளவினவான துகள்கள், 'சரவைமணல்' எனவும், 0.2 மி. மீக்கும், .02 மி. மீக்கும் இடையானவை 'நுண்மணல்' எனவும், .02 மி. மீக்கும் .002 மி. மீக்கும் இடையானவை 'வண்டல்' எனவும், .002 மி. மீக்கும் குறைந்த அளவான மணல்களின் சேர்வு 'களிமண்' எனவும், குறிப்பிடப்படுவன. பொதுவாக, ஒரு மில்லிமீட்டரில் ஆயிரத்திலொரு பங்கு அளவானதைவிடக் குறைந்த துகள்கள் நிரலமைப் புற்றுப் பரவியுள்ளவாறுன பொருந்துமுறை கிலக்கிடையானது (Colloidal) எனப்படும். நீர், காற்று, இன்னோரன்ன ஒருபடித்தான அமைப்பு முறையினின்று கிலக்கிடையான அமைப்புமுறை வேற்றுமையானது.

ஓரளவான களிமண்ணில், பல வளவின வான துகள்கள் எவ்வெவ் வளவான வீதங்களில் இருப்பன என்பதைப் பகுத்தறியும்பொருட்டு, முதலில், அக் களிமண், நீராக்கையீருயிரியால் (Hydrogen Peroxide) நன்கு கழுவப்படுகிறது. அதையொட்டி, அதனின்று இயமானப் பான்மையான (Organic) பொருள்களும் கரையும் பொருள்களும் அகற்றப்படுவன. பிறகு, நீர் நிறைந்துள்ள பாண்ட மொன்றில் அக் களிமண் இடப்பட்டு, அதில் கலக்கப்படும். அக் கலங்கனீர் அவ்வாறே விட்டு வைக்கப்படுகிறது. பின்னர், பாண்டத்தினுள் குறித்த ஆழத்ததான பகுதியி லுள்ள கலுழி குறித்த இடைப்போது விட்ட நொடிகளில் பரிசிலனை செய்யப்படும். தொடக்கத்தில், ஆங்கு எல்லா வளவின வான துகள்களும் ஒத்த வீதங்களிலாய் அடர்ந்திருப்பன எனக் காணவரும். பொழுதாக, ஆக, பெருந் துகள்களின் வீதம் குறைந்து வர லாகும். ஏனெனின், அவை விரைவில் பாண்டத்தி னடிப் பகுதியில் படிந்துவிடுவன. நாழிகைப் போக்கில் அடியில் படிந்துவிடாத மிகச் சிறு துகள்கள் மட்டுமே பரிசிலனை யாழத்துப் பகுதியில் இருப்பன வாகும். இங்ஙனம் செய்யப்பட்ட சோதனையொன்றில், 30 செண்டிமீட்டர் ஆழத்தில் சோதனைத் துவக்கத்தின் பிறகு 30 நிமிடம் கடந்து போன நொடியில், நூற்றி லொரு பங்கு மில்லி

மீட்டருக்குக் குறைத்த வளவின வான துகள்களே யிருந்தன எனக் காணப்பட்டது. 80 நிமிட மான பிறகு, இருநூற்றி லொரு பங்கு மில்லிமீட்டருக் குறைந்தனவே ஆங்கிருந்தன. பொழுது செல்லச் செல்ல, ஆங்கு, அளவில் மிகச் சிறியனவே எஞ்சிவர லாயின. இம்முறையை யொட்டிய சோதனைகன் மிக நுட்பமான கருவிகளைக் கொண்டு செய்யப்படுவன. அவ்வாறான கருவிக் கெழுமல் ஒன்றைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறுவோம்.

கலங்கனீர் நிறைந்த கண்ணாடித் தொட்டி யொன்றினூடே மெலிந்த கற்றையான ஒளிக் கதிர்கள் படுக்கை வாட்டத்தில் செலுத்தப்படுவன. அக் கற்றையானது கலுழியினூடே சென்று வெளிப்பட்ட பிறகு கேழ்-மின்னாக்குக் கூடு (Photo Electric Cell) என்ற கருவிக்குள் உகைக்கப் படுகின்றன. அக் கருவியில் ஒளிப் படலின் தொடர்பாய் மின்னோட்டம் விளைகிறது. அம் மின்னோட்டத்தி னளவு ஒளி தரும் இலகலின் பொலிவுத் தகையி னளவைப் (Intensity of Illumination) பொறுத்திருப்பது. மின்னோட்டத்தி னளவு கால்வனிக் காறுவி (Galvanometer) என்ற கருவியால் அளவை செய்யப்படும். சோதனைத் தொட்டி கொண்ட கலுழியினூடே ஒளி செல்லும் ஆழத்துப் பகுதியில், தொடக்கத்தில பலவளவின வான துகள்களும் மிகுதியா யிருப்பன. ஆதலால், தொட்டியினின்று வெளிச் செல்லும் ஒளியினது இலகு பொலிவுத் தகையி னளவு குறைந்திருப்பது. அதையொட்டிக் கால்வனிக் காறுவி குறை யளவான மின்னோட்டத்தையே சுட்டும். பொழுதின் போக்கில் பெருந் துகள்கள் தொட்டியி னடிக்கு வீழ, வீழ, ஒளிக் கற்றையின் இலகு பொலிவுத் தகையி னளவு மிகையாகி வருவது. கால்வனிக் காறுவி, மிக்க வளவான மின்னோட்டத்தைத் தெரிவிப்பதாகும். இன்னும் பல நுட்ப வமைப்புக்களும் கருவி கூட்டுப்பொருந்தலில் தொடுக்கப்படுவன. அவற்றைக் குறித்து விரித்துக்கொண்டே போயின், இக்கட்டுரை மிகவும் நீண்டுவிடும் என அஞ்சி, அவ்வாறு செய்யாமல், கருவிப் பண்பு கூறலை இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். அத் தகையவான நற் கருவிகளைக் கொண்டு, பரிசீலனைக் கென எடுக்கப்பட்ட களிமண்ணானது கொண்ட துகள்கள் அவற்றின் பரிமாணத்தை யொட்டி எவ்வாறான வீதங்களி லமைந்த தொகைகளினவாய் இருப்பன என செவ்வைத் திருத்தமாய் அளவிடப்பட்ட நுட்பங்களுடன் அறியப்படுகிறது.

களிமண் குழைபாற்பட்ட பொருணாவணைச் செய்திகளில், அடுத்தபடியாக பாண்டங் குயிற்றுவோர்க்குப் பயன்படத் தக்கவை எவை யெனக் காண்போம். அவை, களிமண் நெரிவுற்ற

போது, (Strained) அதனில் தோன்றும் விளைவுகளைக் குறித்தனவே. களிமண்ணைப் பிசைந்து தக்கபடி உருட்டிக் குயவன் பாண்டங்களை உருவாக்குகிறான். அதற்குத் தக்கவாறான பொருள் இளகுவண்ணமா யிருத்தல்வேண்டும். ஆனால், உருவமா யமைந்தது, அவ் வுருவைக் குலைக்கும்படியான நெரித்தல்களை எதிர்க்கவேண்டும். பாண்டங்களை மழமழப்பா யாக்கற் கெனப் பூசப்படும் சேற்றுக் குழம்பானது, சிறிதளவான நெரித்தலையேனும் எதிர்க்க வியலாதவாறு இருத்தல் வேண்டும். ஏனெனின், அது பாண்டப் பரப்பின் மீது சீராய் ஓடிப் பரவல், வேண்டற்பாலது.

களிமண் மொத்தை யொன்று மிடலுறுத்தப்பட்டபோது, அதில் எவ்வாறான தெற்றல்கள் தோன்றுவன என்பதை காணற் கான வழிகள் பலவுள. அவற்றி லொன்று, அக்களிமண் ணுருண்டையைத் துளையிட்ட மூடி கொண்ட குழலொன்றில் வைதத பிறகு, அதைபீச்சா னென்றால் அழுத்திக் குழலினுள் திணித்தல் என்பது. அஙஙனம திணிக்கப்படும் களிமண்ணு னது, செம்மண்ணும் மஞ்சள் மண்ணும் என்ற இரு வகைகள், முறையே, அடுத் தடுத்தனவாய் மாறி மாறி வரும் படலங்களி லாய்அமைந்தவாறு யிருப்பின், பீச்சான்அழுத்தலின் விளைவாய், மூடித் துளையின் வழியே பிதுங்கி வரும் பிழம்பைக் குறுக்கே அரிந்து பார்த்து அவ் விரு வகைகள், முறையே, ஓடி யுள்ள வண்ணங்களைக் கொண்டு, அவற்றின் தராதரத் தெற்றல்களைப் பற்றி அறியலாம். சரிவுப் போக்கான மிடலுறுத்தப்படின் (Shearing Stress), களிமண்ணுனது எவ்வாறான விள்ளல்கு ளடையது, என ,தைக் குறித்துத் தெரிந்து கொள்ளற்கென, அஃது, ஒரே ஆயத்தை நடுவாய்க் கொண்ட இரு குழல்களி னிடைவயின் வைக்கப்படுகிறது. பிறகு, வெளிப்புறமா யுள்ள குழல சுழற்றப்படுகிறது. உட்பக்கக் குழல் கம்பி யொன்றால் தொங்கவிடப்பட்டிருக்கும். சுழற்சி தரும் முடுகியல் முரணீடு (Torsional Couple) களிமண்ணினூடே உட்பொருத்தக் குழலின் மீது உறுத்தப்படுகிறது. அதை யொட்டி அக் குழலைத் தாங்கும் கமபி திருகப்படும். அத் திருகலின் அளவு கம்பியைத் திருப்பற் கான கறங்குத் தகையின் (Torsion) அளவைப் பொறுத்திருப்பது.

(தொடரும்.)